கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஸ்ரீவில்லிபுத்தூர்.
முன்னிலை – திரு.T.V.**மணி, B.A., LL.B.,**
கூடுதல் மாவட்ட நீதிபதி, ஸ்ரீவில்லிபுத்தூர்.
2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6ம் நாள் வெள்ளிக்கிழமை

**குற்றவியல் மேல்முறையீட்டு வழக்கு எண்.14/2021**
**(CNR.NO.TNVR010004332021)**

| | |
|---|---|
| எந்த நீதிமன்றத்திலிருந்து இந்த மேல்முறையீடு முன்னிடப்பட்டுள்ளது. | நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஸ்ரீவில்லிபுத்தூர் |
| கீழமை நீதிமன்றத்தின் வழக்கு எண். | சுருக்கு விசாரணை வழக்கு எண்.627/2016 |
| மேல்முறையீட்டாளரின் பெயர் மற்றும் விலாசம் | தங்கராஜன், வயது 58<br>த/பெ.மாணிக்கம்,<br>தட்டான் தோப்பு தெரு, கீழக்கரை, இராமநாதபுரம் மாவட்டம். |
| எதிர்மேல்முறையீட்டாளர் பெயர் | சார்பு ஆய்வாளர்,<br>நத்தம்பட்டி காவல் நிலையம்<br>குற்ற எண்.122/2016 |
| கீழமை நீதிமன்ற தீர்ப்புரை நாள் | 07.01.2021 |
| கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பும் தண்டனையும் | முடிவில் எதிரிக்கு, இ.த.ச பிரிவு 279ன் கீழான குற்றத்திற்கு 3 மாதம் கடுங்காவல் சிறை தண்டனையும், ரூ.500/– அபராதம் விதித்தும், அபராதம் செலுத்த தவறினால் மேலும் 1 மாதம் மெய்காவல் சிறை தண்டனையும், இ.த.ச பிரிவு 338ன் கீழான குற்றத்திற்கு 6 மாதம் கடுங்காவல் சிறை தண்டனையும், ரூ.500/– அபராதம் விதித்தும், அபராதம் செலுத்த தவறினால் மேலும் 3 மாதம் மெய்காவல் சிறை தண்டனையும், அனுபவிக்க வேண்டுமென்று கு.வி.மு.ச பிரிவு 255(2)ன் கீழ் தீர்பளிக்கப்பட்டுள்ளது |
| கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பு மாற்றியமைக்கப்பட்டுள்ளதா? உறுதி செய்யப்பட்டுள்ளதா? நீக்கரவு | முடிவில், இம்மேல்முறையீடானதை தள்ளுபடி செய்து ஸ்ரீவில்லிபுத்தூர், நீதித்துறை நடுவர் நீதிமன்றம் |

| | |
|---|---|
| செய்யப்பட்டுள்ளதா அதன் விபரம் | எண்.1ல் கடந்த 07.01.2021 அன்று சுருக்கு விசாரணை வழக்கு எண்.627/2016ல் வழங்கிய தீர்ப்புரையை இதன் மூலம் உறுதி செய்தும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. மேலும் ஸ்ரீவில்லிபுத்தூர், நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 நீதிமன்றமானது எதிரிக்கு பிடியாணை அனுப்பி அவரை கைது செய்து மீதமுள்ள தண்டனை காலத்தை அனுபவிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |

இந்த மேல்முறையீடானது கடந்த 29.01.2026 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தும், மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.இராஜேந்திரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் கூடுதல் அரசு தரப்பு வழக்கறிஞர் திரு.C.அன்னக்கொடி, அவர்கள் முன்னிலையாகியும், விசாரணை நீதிமன்ற தீர்ப்புரை மற்றும் அரசுதரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரைகளையும் கேட்டறிந்த பின்னர், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து பிறப்பிக்கும்.

## <u>தீர்ப்புரை</u>

ஸ்ரீவில்லிபுத்தூர், நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் கடந்த 07.01.2021ல் STC.No.627/2016ல் வழங்கிய தீர்ப்புரையை ரத்து செய்யக் கோரி மேல்முறையீட்டாளர்/எதிரியால் இந்த மேல்முறையீடானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

– – – – –

### 2) <u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்</u>

மம்சாபுரம் காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளரான புகார்தாரர் 02.12.2016ம் தேதி NH 208 தென்காசி – மதுரை ரோட்டில் அழகாபுரியில் உள்ள காவல் சோதனை சாவடியில் பணியில் இருந்து 18.30 மணியளவில் சோதனை சாவடிக்கு வெளியே நின்று வாகன தணிக்கை செய்து கொண்டிருந்த போது, எதிரி தங்கராஜன் TN 63 N 1317 என்ற பதிவு எண்ணுள்ள அரசு பயணிகள் பேருந்தை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சாவடிக்கு முன்பு ரோட்டில் வேக தடையரண் (Barricade) இருப்பதை கவனிக்காமல் அசட்டையாகவும், கவனக்குறைவாகவும், வேகமாகவும்

ஓட்டி வந்து சோதனை சாவடிக்கு முன்பு ரோட்டிற்கு மேற்கு பக்கமாக இருந்த வேக தடையரண் (Barricade) மீது வேகமாக மோதியதில் ஷை வேக தடையரண் (Barricade) தூக்கி எறியப்பட்டு, சோதனை சாவடி முன்பு நின்று கொண்டிருந்த புகார்தாரரின் இடது பக்க காலோடு சேர்த்து விழுந்ததில், புகார்தாரர் நிலை தடுமாறி கீழே விழுந்து , புகார்தாரருக்கு இடது தொடை பகுதியில் எலும்பு முறிவு கொடுங்காயத்தை ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளதாக எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 338 கீழ் நத்தம்பட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3) விசாரணை நீதிமன்றத்தில் வழக்கின் அனைத்து ஆவணங்களும் எதிரிக்கு கு.வி.மு.ச பிரிவு 207ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் போதிய அவகாசம் கொடுத்து எதிரி மீதான இ.த.ச சட்டப்பிரிவு 279, 338ன் படி விளக்கிக் கூறி கேட்ட போது எதிரி குற்றச்சாட்டை மறுத்துரைத்தார். எனவே கீழமை நீதிமன்றத்தில் அரசு தரப்பு விசாரணைக்காக உத்தரவிடப்பட்டுள்ளது.

4) விசாரணை நீதிமன்றத்தில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.14 வரையில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் சாட்சி விசாரிக்கப்படவில்லை, சான்றாவணம் குறியீடு செய்யப்படவில்லை.

5) விசாரணை நீதிமன்றம் சாட்சிய விசாரணைக்கு பின்னிட்டு, வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், எதிரிக்கு, இ.த.ச பிரிவு 279ன் கீழான குற்றத்திற்கு 3 மாதம் கடுங்காவல் சிறை தண்டனையும், ரூ.500/– அபராதம் விதித்தும், அபராதம் செலுத்த தவறினால் மேலும் 1 மாதம் மெய்காவல் சிறை தண்டனையும், இ.த.ச பிரிவு 338ன் கீழான குற்றத்திற்கு 6 மாதம் கடுங்காவல் சிறை தண்டனையும், ரூ.500/– அபராதம் விதித்தும், அபராதம் செலுத்த தவறினால் மேலும் 3 மாதம் மெய்காவல் சிறை தண்டனையும், அனுபவிக்க வேண்டுமென்று பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்புரையை எதிரி தரப்பில் ஆட்சேபித்து அதனை ரத்து செய்ய கோரி இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) <u>மேல்முறையீட்டு குறிப்பாணையின் சுருக்கம் பின்வருமாறு</u>

1. கீழமை நீதிமன்ற தீர்ப்பு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல.

2. கீழமை நீதிமன்றம் தனது தீர்ப்பில் முதல் பக்கத்தில் சம்பவ தேதி 02.12.2016ம் தேதி என்றும் உள்ளது. ஷை சம்பவ தேதி குளறுபடியாக உள்ளது. மேலும் கீழமை நீதிமன்றம் தனது திப்பில் **2வது பக்கத்தில் சோதனை சாவடிக்கு முன்பு ரோட்டிற்கு மேற்கு பக்கமாக இருந்த வேக தடையரண் மீது வேகமான மோதியதில் என்று புகாரிலோ அல்லது போலீஸ் விசாரணையிலோ அல்லது அ.சா.1 முதல் விசாரணையிலோ சொல்லாத சங்கதிகளை கீழமை நீதிமன்றம் மிகைப்படுத்தி ஷை தீர்ப்பின் நகலில் சொல்லியதிருந்தே தெரிகிறது** ஷை வழக்கில் எதிரியை தண்டித்தது தவறு என்று நன்கு துலங்கும். ஷை வழக்கில் சம்பவ தேதி 02.12.2016 என்று

குறிப்பிட்டதிலிருந்தே குளறுபடியாக இருக்கிறது. இவ்வாறு சம்பவ தேதி முரண்பாடுகளையும், கருத்தில் கொள்ளாமல் வழங்கிய தீர்ப்புரை தலைபட்சமாக வழங்கியிருப்பது சட்டப்படியும், ஒரு நியாயப்படியும், நிலைநிற்கத்தக்கதல்ல.

3.கீழமை நீதிமன்றத்தில் மேல்முறையீட்டாளர்/எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையின் போதும் வாதுரையின் போதும் எடுத்துரைக்கப்பட்டு வழக்கின் சூழ்நிலைகளையும், சாட்சிய முரண்பாடுகளையும், கருத்தில் கொள்ளாமல் தீர்ப்புரை ஒரு தலைபட்சமாக வழங்கியிருப்பது சட்டப்படியும், நியாயப்படியும், நிலைநிற்கத்தக்கதல்ல.

4.கீழமை நீதிமன்றம் ஷை வாகன விபத்து யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்று சீர்தூக்கிப்பார்க்காமல் வழங்கிய தீர்ப்பு சட்டப்படி செல்லத்தக்கதல்ல.

5. கீழமை நீதிமன்றம் மேல்முறையீட்டாளர்/எதிரி தனது வாகன நிதானமாகவும், கவனமாகவும் ஒட்டிவந்தார் என்றும், சம்பவ இடத்தில் வேக தடையரண்கள் அதிகமாக இருக்கிறது என்றும், வளைவு பகுதிகள் உள்ளன என்று கூறியிருந்ததை ஏற்காமல் சாட்சிகள் வளைவு பகுதி இல்லை என்று கூறியதை வைத்து (சம்பவ இடம் வளைவு பகுதிகள் மற்றும் வேக தடை அரண்கள் மற்றும் எதிரி ஷை சம்பவ இடத்தின் ரோட்டில் கடந்த 10 வருடங்களாக பேருந்தை ஓட்டியவர் என்றும், சீனியர் ஓட்டுநர் என்று எடுத்துரைத்தும் கீழமை நீதிமன்றம் வழங்கியிருக்கும் கீப்பு சட்டப்படி செல்லத்தக்கதல்ல.

6. கீழமை நீதிமன்றம் அரசு தரப்பினரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களையும், சாட்சிகளின் வாக்கு மூலங்களுங்கும் முன்னுக்கு பின் முரண்பாடாக உள்ளது என்று சிறிதும் கவனித்து பார்க்காமல் வழங்கியுள்ள தீர்ப்பு தவறானது ஆகும்.

**விபத்துக்குள்ளான வாகனம் அதிவேகமாகவும், ஹாரன் அடிக்கமாமலும், அஜாக்கிரதையாகவும் வந்து மோதியதா என்பத்தை பார்க்கும் போது,**

7. கீழமை நீதிமன்றத்தில் அ.சரி முதல் அ.சா.5 வரை கூறியுள்ள முதல் விசாரணைக்கும், காவல் துறையில் கூறியுள்ள வாக்கு முலத்திற்கும் முன்னுக்கு பில முரண்பாடுகள் கொண்டவைகளாக இருக்கின்றன. அசா.1 புகார்தாரர் காவல் துறையில் பணிபுரியும் சார்பு ஆய்வாளர் ஆவார். காவல் துறையில் பணிபுரிவதால் அதிகாரத்தை பயன்படுத்தி மேல்முறையீட்டாளர்/ எதரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிரி விபத்திற்குண்டான வாகனத்தை ஓட்டிச்சொல்லும் போது குறுக்காக வேக தடைஅரண்கள் இரு பகுதிகளிலும் இரு இரு வேக தடைஅரண்கள் இருக்கின்றன என்பதை விசாரணை அதிகாரியான அ.சா.14 தனது குறுக்கு விசாரணையில் கூறியுள்ளதையும், மேலும் சம்பவ இடத்தில் எந்த பகுதியில் உள்ள வேக தடைஅரண் அ.சா.1 ன் மீது விழுந்தது என்று தெளிவாக புகாரிலோ அல்லது போலீஸ் விசாரணையிலோ அல்லது நீதிமன்ற விசாரணையிலோ சொல்லவில்லை. எதிரி ஷை வாகனத்தை

மேல்முறையீட்டாளர்/ எதிரி வேண்டுமென்றே ஒட்டிச் செல்லவில்லை என்பது நன்கு துலங்கும். மேலும் ஷை விபத்து குறித்து சம்பவ இடம் வளைவான பகுதி மற்றும் வேக தடை அரண்கள் இருபுறமும் இரு இரு வேக தடை அரண்கள் உள்ளது அவ்வாறு இருந்தும் ஷை குறைகளை சரிவர பார்க்காமல் மேல்முறையீட்டாளர்/ எதிரிக்கு கீழமை நீதிமன்றம் தண்டனை வழங்கியது தவறானது அனுமானத்தின் பேரில் (Presumption) வழங்கியுள்ள திப்பு தவறானது ஆகும்.

8. மேலும் கீழமை நீதிமன்றம் விபத்து எப்படி நடந்தது என்றும், விபத்து என்பதை அ.சா.8 கார்த்திகேயன் மோட்டார் வாகன ஆய்வாள் தனது ஏற்பட்ட அரசு பேருந்திற்கு எந்த பக்கத்தில் சேதமடைந்து உள்ளது அறிக்கையில் அரசு பேருந்திற்கு Left side body slightly pressed of the real wieel" ல் சேதம் ஏற்பட்டுள்ளது என்பதை கீழமை நீதிமன்றம் சரிவர கவனிக்காமல் வழங்கியுள்ள தீர்ப்பு தவறானது ஆகும்.

9. அ.சா.2 முதல் 3 வரை உள்ள சாட்சிகள் உடன் பணிபுரியும் காவலர்கள் ஆவார்கள் மேலும் அ.சா.4 முதல் 7 வரை உள்ள ஷை சாட்சிகள் உறவினர்கள் மற்றும் காவல் துறைக்கு பயந்து சம்பவ இடத்தில் கடை வைக்க முடியாது என்ற பயத்தில் கூறிய அக்கறை சாட்சிகள் ஆவார்கள். மேல்முறையீட்டாளர்/ எதிரிக்கும் வழக்கிற்கு எந்த சம்மந்தமும் கிடையாது. மேலும் அ.சா.1 காவல்துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார். இதலிருந்தே தெள்ள தெளிவாக தெரிகிறது நஷ்ட பெறுவதற்காகவே எதிரி மீது புகார் கொடுத்துள்ளர் என்று நன்கு துலங்கும்.

10.அ.சா.1 தனது சாட்சியத்தில் தனது காயத்தைப் பற்றி சரியாக கூறவில்லை.ஷை விபத்திற்குண்டான வாகனம் எங்கே சென்றது. எதற்கு சென்றது என்ற விபரம் சரியாக கூறவில்லை. மேலும் விபத்திற்குண்டான வாகனத்தில் எத்தனை பேர் இருந்தார்கள் என்று சரிவர கூறவில்லை. மேலும் அ.சா.1 முதல் 5 தனது குறுக்கு விசாரணையில் சமபவ நடந்த நேரம் மாறி மாறி தெளிவாக கூறியுள்ளார். எனவே ஷை கூறிய முன்னுக்கு பின் முரண்பாடான கருத்துக்களையும் கீழமை நீதிமன்றம் பாராமல் மேல்முறையீட்டாளர்/ எதிரிக்கு வழங்கிய தீர்ப்பு தவறானது ஆகும். மற்றும் பாராபட்சம் உடையது ஆகும்.

11. மேலும் கீழமை நீதிமன்றம் தனது தீர்ப்பின் 18 பக்கம் 40 வது பாராவில் சம்பவம் இடம் வளைவான இடம், வேக தடுப்பு அரண்கள் இருக்கின்றன மேலும் அவ்வாறு இருக்கையில் வேகமாக வர வாய்ப்பு இல்லை என்று எடுத்து கூறியும் முன்னுக்கு பின் முரண்பாடுகளுடன் கூறியுள்ளதை கீழமை நீதிமன்றம் பாராமல் ஷை மேல்முறையீட்டாளர்/ எதிரிக்கு வழங்கிய தீப்பு தவறானது ஆகும். மற்றும் பாராபட்சம் உடையது ஆகும்.

12.அ.சா.7 முனியப்பன் பார்வை மகஜர் ஆவார். குறுக்கு விசாரணையில் காவல் நான் கையொப்பம் போட்ட காளில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது தெரியாது என்று கூறியுள்ளார். இவ்வாறு

கூறியதை கீழமை நீதிமன்றம் சரியாக புரிந்து கொள்ளாமல் தீர்ப்பு கூறியிருப்பது தவறானதாகும்.

13. அ.சா.8 கார்த்திகேயன் மோட்டார் அறிக்கையில் வாகன ஆய்வாள் தனது அரசு பேருந்திற்கு Left side body slightly pressed back side of the real whee " ல் சேதம் ஏற்பட்டுள்ளது என்பதை என்று தனது முதல் விசாரணையில் கூறியுள்ளார். குறுக்கு விசாரணையில் விபத்து நடந்த டந்த வாகனத்தை சம்பவ இடத்தில் வைத்து ஆய்வு செய்யவில்லை என்று தெளிவாக கூறியுள்ளார். இவ்வாறு பார்க்கும் தனது அலுவலகத்தில் எல்லாமே உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்பது நன்கு துலங்கும். இவ்வாறு கூறியதை கீழமை நீதிமன்றம் சரியாக புரிந்து கொள்ளாமல் தீர்ப்பு கூறியிருப்பது தவறானதாகும்.

14. அ.சா.14 விசாரணை அதிகாரி ஆவார். ஷை விசாரணை அதிகாரி தனது குறுக்கு விசாரணையில் "ஷை விபத்தின் புகாரிலோ போலிஸ் விசாரணையிலோ மற்றும் நீதிமன்ற விசாரணையிலோ வேக தடுப்பு அரண்கள் இரு பகுதிகளிலும் இரண்டு இரண்டு தடுப்பு அரண்கள் இருக்கின்றன எனவும், வளைவு பகுதி உள்ளன என்றும் அவ்வாறு இருக்கும் போது வேகமாக வர வாய்ப்பு இல்லை என ஒப்புக்கொண்ட போதிலும் கீழமை நீதிமன்றம் சரிவர எதிர் பார்க்காமல் மேல்முறையீட்டாளர்/ புகார்தாரர் முன்னுக்குப் பின் முரணான சாட்சியம் அளித்துள்ளார் என்பதையும் மேலும் அரசு தரப்பில் எந்த சான்று பொருள் ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்பதை கவனிக்காது கீழமை நீதிமன்றத்தின் கவனக்குறைவு என்பதையே விளக்குகிறது.

ஷை வழக்கில் முரண்பாடுகள் வழக்கு முழுவதும் இருக்கிறது என்பதை எடுத்துக்கூறி கீழ்க்கண்ட மாண்புமிகு உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற தீர்ப்புகள் உள்ளன.

1. 2006(1) Acquittal 275

2. 2. 2000 (II) L.W. 646

3. 2006 SAR 627 என்ற தீர்ப்பு நகலை கீழமை நீதிமன்றத்தில் எடுத்துக்கூறியும் கீழமை நீதிமன்றம் வழங்கிள்ள தீர்ப்பு தவறானது ஆகும் மற்றும் பாராபட்சம் உடையது ஆகும்.

மேலே கண்ட இம்மேல்முறையீட்டை காரணங்களினாலும் அனுமதித்து ஸ்ரீவில்லிபுத்தூர், நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் கடந்த 07.01.2021ல் STC.No.627/2016ல் வழங்கிய தீர்ப்புரையை ரத்து செய்யக் கோரி மேல்முறையீட்டாளர் பக்கம் வணக்கமாய் பிரார்த்திக்கப்படுகிறது.

**7)** இம்மேல்முறையீட்டினில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள்,

1) இந்த மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா?

2) ஸ்ரீவில்லிபுத்தூர், நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் கடந்த 07.01.2021ல் STC.No.627/2016ல் வழங்கிய தீர்ப்புரையை ரத்து

செய்யப்படத்தக்கதா?

8) **<u>பிரச்சனை 1 மற்றும் 2 க்கான தீர்வு</u>**

(8–i) இந்த மேல்முறையீட்டாளர் தரப்பில், வாதுரையின் பொழுது ஸ்ரீவில்லிபுத்தூர், நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் கடந்த 07.01.2021 ல் STC.No.627/2016 ல் வழங்கிய தீர்ப்பு முடிவான, எதிரிக்கு, இ.த.ச பிரிவு 279 ன் கீழான குற்றத்திற்கு 3 மாதம் கடுங்காவல் சிறை தண்டனையும், ரூ.500/– அபராதம் விதித்தும், அபராதம் செலுத்த தவறினால் மேலும் 1 மாதம் மெய்காவல் சிறை தண்டனையும், இ.த.ச பிரிவு 338 ன் கீழான குற்றத்திற்கு 6 மாதம் கடுங்காவல் சிறை தண்டனையும், ரூ.500/– அபராதம் விதித்தும், அபராதம் செலுத்த தவறினால் மேலும் 3 மாதம் மெய்காவல் சிறை தண்டனையும், அனுபவிக்க வேண்டுமென்று பிறப்பிக்கப்பட்டுள்ள மேற்படி தீர்ப்பை எதிர்த்து இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(8–ii) இம்மேல்முறையீட்டு வாதுரையின் பொழுது, மேல்முறையீட்டாளர் தரப்பில் மேல்முறையீட்டிற்கான காரணங்களாக சொல்லியுள்ளதை மேற்கோள் காட்டி வாதுரைத்து மேல்முறையீடு அனுமதித்தும், விசாரணை நீதிமன்ற தீர்ப்புரையை ரத்து செய்தும் எதிரியை விடுதலை செய்யும் படி வாதிடப்பட்டது.

(8–iii) எதிர்மேல்முறையீட்டாளர்/அரசு தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அவர்களால் வாதுரை செய்யப்பட்டதை காணும் பொழுது அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் அ.சா.14 வரையானவர்களின் சாட்சியங்களிலிருந்தும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் மூலம் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபணமாகியுள்ளது என்றும் விசாரணை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புரை சரியானது என்றும் ரத்து செய்யப்பட வேண்டிய அவசியம் இல்லை என்றும் மேல்முறையீட்டிற்கான காரணம் உண்மையில்லை என்றும் மேல்முறையீட்டை தள்ளுபடி செய்தும் விசாரணை நீதிமன்ற தீர்ப்புரையை உறுதி செய்ய வேண்டுமாய் வாதுரைக்கப்பட்டது.

(8–vi) அரசு தரப்பில் எதிரி மீது புகார் அளித்த புகார்தாரரான சிதம்பரம் அ.சா.1 ஆகவும், சம்பவத்தைக் கண்ணுற்ற சாட்சிகளான தங்கேஸ்வரன், தேவி, காளிமுத்து, பாலமுருகன் ஆகியோர்கள் அ.சா.2, அ.சா.3, அ.சா.4 அ.சா.6 ஆகவும், சம்பவத்தைக் கேள்விப்பட்ட சாட்சிகளான சரவணன் மற்றும் ராஜம் அ.சா.5 மற்றும் அ.சா.12 ஆகவும், பார்வை மகஜர் சாட்சியான முனியப்பன் அ.சா.7 ஆகவும், மோட்டார் வாகன ஆய்வாளர் கார்த்திகேயன் அ.சா.8 ஆகவும், காயம்பட்ட அ.சா.1 க்கு மேல்சிகிச்சை அளித்த மருத்துவர் ஞானகுருசாமி அ.சா.9 ஆகவும். அ.சா.1 க்கு முதலுதவி சிகிச்சை அளித்த மருத்துவர் மகேஸ்வரி அ.சா.10 ஆகவும். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் சீனிவாசன் அ.சா:11 ஆகவும், அரசு போக்குவரத்து கழகத்தின் இளநிலை உதவியாளர் வேணுகோபால் அ.சா.13 ஆகவும், வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர்

காளைமுத்தையா அ.சா.14 ஆகவும் விசாரிக்கப்பட்டு, அரசு தரப்பில் 10 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(8–v) அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பது பற்றி பரிசீலிக்கும் போது, அ.சா.1 கொடுத்த அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில், 02.10.2016 ம் தேதியில் திருவில்லிபுத்தூர் உட்கோட்டத்தில் மதுரை – தென்காசி தேசிய நெடுஞ்சாலை 208 ல் அழகாபுரி – விருதுநகர் பிரிவு விலக்கு ரோட்டில் உள்ள காவல் சோதனை சாவடியில் நத்தம்பட்டி காவல் நிலைய காவலர் 1780 தங்கேஸ்வரன் மற்றும் வன்னியம்பட்டி காவல்நிலைய பெண் காவலர் 930 திருமதி.தேவி ஆகியோர்களுடன் பணியில் இருந்த போது, மாலை 18.30 மணிக்கு சோதனை சாவடி வாசலில் நின்று கொண்டிருந்த போது, தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த TN 63 N 1317 என்ற அரசு பயணிகள் பேருந்தை எதிரி அதிவேகத்தில், அஜாக்கிரதையாக, அசட்டு துணிச்சலுடன் ஓட்டி வந்து, சோதனை சாவடியில் மேற்கு பக்கம் இருந்து பேரி கார்டில் வேகமாக மோதியதில், சோதனை சாவடி வாசலில் நின்று கொண்டிருந்த தன் மீது விழுந்து, இடது பக்க இடுப்பிலும், இடது கால் தொடையிலும் வீக்க காயம் ஏற்பட்டதாகவும், அங்கு இருந்தவர்கள் ஆம்புலன்ஸ் மூலம் ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு தன்னை சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

(8–vi) அ.சா.1 க்கு முதலுதவி சிகிச்சை அளித்த அ.சா.10 மருத்துவர் மகேஸ்வரி 02.10.2016 ம் தேதி ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது, 57 வயது மதிக்கத்தக்க சிதம்பரம் என்பவர் தன்னிடம் சிகிச்சைக்கு வந்ததாகவும், அவர் 06.30 மணியளவில் அழகாபுரி செக் போஸ்டில் நின்று கொண்டிருந்த போது, மதுரை நோக்கி வந்த பி.ஆர்.சி பேருந்து பேரிகார்டு மீது தட்டியதில், பேரிகார்டு அவர் மேலே விழுந்து காயம் ஏற்பட்டதாகக் கூறியதாகவும், வலி அதிகமாக இருந்ததால், முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்து, அ.சா.ஆ.6 விபத்து பதிவேடு வழங்கியதாகவும் கூறியுள்ளார்.

(8–vii) அ.சா.1 சிகம்பரம், அ.சா.2 தங்கேஸ்வரன், அ.சா.3 தேவி, அ.சா.4 காளிமுத்து, அ.சா.5 சரவணன், அ.சா.7 முனியப்பன், அ.சா.12 ராஜம், அ.சா.10 மருத்துவர் மகேஸ்வரி, அ.சா.11 சிறப்பு சார்பு ஆய்வாளர் சீனிவாசன், அ.சா.14 சார்பு ஆய்வாளர் காளை முத்தையா ஆகியோர்களின் சாட்சியத்திலிருந்தும், அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலம், 02.10.2016 ம் தேதிய அ.சா.ஆ.2 பொது நாட்குறிப்பு, அ.சா.ஆ.3 பார்வை மகஜர், அ.சா.ஆ.6 விபத்து பதிவேடு, அ.சா.ஆ.7 முதல் தகவல் அறிக்கை, அ.சா.ஆ.9 வரைபடம் ஆகிய சான்றாவணங்களிலிருந்தும், 02.10.2016 ம் தேதி மாலை 06.30 மணிக்கு அ.சா.1, அ.சா.2, அ.சா.3 ஆகியோர்கள் அழகாபுரி சோதனை சாவடியில் வாகன தணிக்கை பணியில் இருந்த சமயத்தில் இராஜபாளையத்திலிருந்து, மதுரை நோக்கி சென்ற பயணிகள் பேருந்து

அழகாபுரி சோதனை சாவடியின் வேக தடையரண் (Barricade) மீது மோதியதில், மேற்படி வேக தடையரண் வாகன தணிக்கை பணியிலிருந்த அ.சா.1 சிதம்பரத்தின் மீது விழுந்து, அ.சா.1 க்கு இடது பக்க இடுப்பிலும், இடது கால் தொடையிலும் வீக்க காயங்கள் ஏற்பட்டுள்ளது என்பதும், சம்பவத்தின் போது அ.சா.1 உடன் பணியில் இருந்த காவலர்கள் அ.சா.2 தங்கேஸ்ரவன், அ.சா.3 தேவி, சம்பவயிடத்தில் பெட்டிக் கடை வைத்திருக்கும் அ.சா.4 காளிமுத்து, அ.சா.6 பாலமுருகன் ஆகியோர்கள் சம்பவத்தை கண்ணுற்றுள்ளார்கள் என்பதும், காயம்பட்ட அ.சா.1 யை அ.சா.2, அ.சா.3, அ.சா.4, அ.சா.6 ஆகியோர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலமாக ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்துள்ளார்கள் என்பதும், சம்பவத்தைக் கேள்விப்பட்ட சாட்சிகளான அ.சா.5 சரவணன், அ.சா.12 ராஜம் ஆகியோர்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்று, அ.சா.1 யை பார்த்து, அவரை மேல்சிகிச்சைக்காக சிவகாசி கிரஹம் மருத்துவமனையில் சேர்த்துள்ளார்கள் என்பதும், அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அ.சா.10 மகேஸ்வரி, அ.சா.1 க்கு முதலுதவி சிகிச்சை அளித்து அவரை மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்துள்ளார் என்பதும், விபத்து பற்றி தகவல் தெரிந்த நத்தம்பட்டி காவல் நிலை சிறப்பு சார்பு ஆய்வாளரான அசர்.11 சீனிவாசன் கிரஹம் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டிருந்த அ.சா.1 சிதம்பரத்தை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று. அதன் அடிப்படையில் அ.சா.ஆ.7 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்பதும். அ.சா.11 சிறப்பு சார்பு ஆய்வாளர் சீனிவாசன் பதிவு செய்திருந்த வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட அ.சா.14 சார்பு ஆய்வாளர் காளைமுத்தையா 03.10.2016 ம் தேதி காலை 09.15 மணிக்கு சம்பவயிடமான அழகாபுரி சோதனை சாவடிக்கு சென்று அசா.7 முனியப்பன். மற்றும் சாட்சி ராமமூர்த்தி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார் என்பதும் தெரியவருகிறது.

(8–viii) எனவே, அரசு தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளவாறு 02.10.2016 ம் தேதியில் அ.சா.1 சிதம்பரம், அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்களுடன் அழகாபுரி சோதனை சாவடியில் வாகன தணிக்கை பணியில் ஈடுபட்டிருந்த போது, இராஜபாளையத்திலிருந்து மதுரை சென்ற பயணிகள் பேருந்து அழகாபுரி சோதனை சாவடியில் வைக்கப்பட்டிருந்த வேக தடையரண் (Barricade) மீது மோதி. மேற்படி வேக தடையரண் அ.சா.1 ன் மீது விழுந்ததில், அ.சா.1 க்கு இடது பக்க இடுப்பிலும், இடது பக்க தொடையிலும் காயம் ஏற்பட்டுள்ளது என்பது அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

(8–ix) மேற்படி அ.சா.1 சிதம்பரம், அ.சா.2 தங்கேஸ்வரன், அ.சா.3

தேவி. அ.சா.4 காளிமுத்து, அ.சா.6 பாலமுருகன் மற்றும் அ.சா.8 மோட்டார் வாகன ஆய்வாளர் கார்த்திகேயன் ஆகியோர்களின் சாட்சியத்திலிருந்தும், அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலம், அ.சா.ஆ.7 முதல் தகவல் அறிக்கை, அ.சா.ஆ.4 மோட்டார் வாகன ஆய்வறிக்கை சான்றாவணங்களிலிருந்தும், சம்பவ நாளான 02.10.2016 ம் தேதி அழகாபுரி சோதனை சாவடியில் வாகன தணிக்கை பணியில் இருந்த அ.சா.1ன் மீது, இராஜபாளையத்திலிருந்து மதுரை நோக்கி சென்ற TN 63 N 1317 என்ற பதிவு எண் கொண்ட அரசு பயணிகள் பேருந்து மோதி விபத்து ஏற்பட்டுள்ளது என்பது அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

(8–x) விபத்தை கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.4 காளிமுத்து, அ.சா.6 பாலமுருகன் ஆகியோர்களும், விபத்தை ஏற்படுத்திய பேருந்தை ஓட்டி வந்த நபரை பார்த்தால், தங்களால் அடையாளம் காட்ட முடியும் என்றும் கூறியுள்ளனர். மோட்டார் வாகன ஆய்வாளரான அ.சா.8 கார்த்திகேயன் வழங்கிய அ.சா.ஆ.4 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில், விபத்தில் தொடர்புடைய TN 63 N 1317 அரசு பயணிகள் பேருந்தின் ஓட்டுனரின் பெயர் என்ற இடத்தில் எதிரி தங்கராஜன் தந்தை பெயர் மாணிக்கம் என்றே குறிப்பிட்டுள்ளார் அ.சா.13 தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பணி மனையின் இளநிலை உதவியாளர் வேணுகோபால், 02.10.2016 ம் தேதியில் இராமநாதபுரத்தில் இருந்து இராஜபாளையத்திற்கு செல்லும் TN 63 N 1317 என்ற பேருந்திற்கு ஆர்.பெருமாள்சாமி என்பவரை நடத்துனராகவும், தங்கராஜன் என்பவரை ஓட்டுனராகவும் பணி நியமனம் செய்ததாக அ.சா.ஆ.8 சான்று அளித்துள்ளார்.

(8–xi) அ.சா.1 சிதம்பரம், அ.சா.2 தங்கேஸ்வரன், அ.சா.3 தேவி. அ.சா.4 காளிமுத்து, அ.சா.6 பாலமுருகன் ஆகியோர்கள் சம்பவ நாளில் எதிரி அரசு பேருந்தை அசட்டையாகவும், கவனமில்லாமலும், வேகமாகவும் ஓட்டி வந்ததின் காரணமாக, பேருந்து அழகாபுரி சோதனை சாவடியில் வைக்கப்பட்டிருந்த வேக தடையரணின் மீது மோதி, அந்த வேக தடையரண் தூக்கி எறியப்பட்டு, அ.சா.1 சிதம்பரத்தின் மீது, விழுந்து அ.சா.1 க்கு விபத்து ஏற்பட்டுள்ளது என்பது குறித்து, தெளிவாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் அரசு தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளவாறு, சம்பவ நாளான 02.10.2016 ம் தேதியில் 06.30 மணிக்கு எதிரி தங்கராஜன் TN 63 N 1317 என்ற அரசு பயணிகள் பேருந்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து, அழகாபுரி சோதனை சாவடியில் உள்ள வேக தடையரண் மீது மோதி, மேற்படி வேக தடையரண் தூக்கி எறியப்பட்டு, அ.சா.1 சிதம்பரத்தின் மீது விழுந்ததில், அ.சா.1 க்கு இடது தொடையில் எலும்பு முறிவு கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது என்பது அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

(8–xii)எனவே மேற்காணும் வகையில் அனைத்து அம்சங்களையும்

ஆராய்ந்து பார்க்கும் பொழுதும், இம்மேல்முறையீட்டிற்கான காரணம் ஏற்புடையதாக இல்லை என்றும் விசாரணை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புரையில் எவ்வித குறைபாடும் இல்லை என்றும் விசாரணை நீதிமன்ற தீர்ப்புரையை குறுக்கீடு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றும் இம்மேல்முறையீடு அனுமதிக்கக் கூடியதாக இல்லை என்றும் தீர்மானித்தும் பிரச்சனை எண்கள் 1 மற்றும் 2க்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

முடிவில், இம்மேல்முறையீடானதை தள்ளுபடி செய்து நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1ல் கடந்த 07.01.2021 அன்று சுருக்கு விசாரணை வழக்கு எண்.627/2016ல் வழங்கிய தீர்ப்புரையை இதன் மூலம் உறுதி செய்தும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. மேலும் ஸ்ரீவில்லிபுத்தூர், நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 நீதிமன்றமானது எதிரிக்கு பிடியாணை அனுப்பி அவரை கைது செய்து மீதமுள்ள தண்டனை காலத்தை அனுபவிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய _பகரப்பட்டது.

T V MANI Digitally signed by T V MANI
Date: 2026.03.06 15:49:26 +0530

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**திருவில்லிபுத்தூர்.**

<u>நகல்:–</u>
நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஸ்ரீவில்லிபுத்தூர்.

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
திருவில்லிபுத்தூர்
கு.மே.வ.எண்.14/2021
சீரான/வரைவு – தீர்ப்புரை
06.03.2026

CA.No.14/2021 - AFT - Judgment Dated: 06.03.2026

Judgment is pronounced. As a result, the Criminal Appeal No.14/2021 is dismissed. The Judgment is passed in STC.No.627/2016 dated 07.01.2021 is hereby confirmed. And the Learned Judicial Magistrate No.1 Court, Srivilliputhur is directed to secure the Accused to serve the remaining period of sentence.

Additional District and Sessions Judge,

Srivilliputhur.